நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கருங்கலில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நிறைவு**

First Published : 27 Feb 2011 01:01:41 PM IST

கருங்கல்,பிப். 26:÷தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல் துறை சார்பாக கருங்கல் சுண்டவிளை அரசு வேளாண்மை அலுவலகத்தில், விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் இம்மாதம் 21-ம் தேதி தொடங்கி சனிக்கிழமை வரை தொடர்ந்து 6 நாள்கள் நடைபெற்றது.

÷நிகழ்ச்சிக்கு தக்கலை வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் சு. வெள்ளையன் தலைமை வகித்தார். ÷

பட்டணங்கால், திற்பரப்பு, அருவிக்கரை பகிர்மானக்குழுத் தலைவர் குணசீலன் முன்னிலை வகித்தார்.

÷கன்னியாகுமரி மாவட்ட பாசன திட்டக்குழுத் தலைவர் லின்ஸ் ஆன்டோ குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்துப் பேசினார்.

÷வேளாண்மைத் துறை உதவி பொறியாளர் பாலமுரளி, பேச்சிப்பாறை வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் க. இறைவன் ஆகியோர் பயிர்களை பாதுகாப்பது குறித்து விளக்கிப் பேசினர்.

÷கருங்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள 20 விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்புக் கருவிகள் தேர்வு செய்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பயிற்சிகள் அளிகப்பட்டது.

÷இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இளநிலைப் பொறியாளர் கண்ணண்,கீழ்மிடாலம் பாசனத் துறைத் தலைவர் ஜோன்ஸ், ஜார்ஜ், ராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**இயற்கை விவசாய கருத்தரங்கு**

First Published : 27 Feb 2011 10:26:54 AM IST

அவிநாசி, பிப்.26: அவிநாசி அடுத்த நடுவச்சேரியில் சனிக்கிழமை இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

÷நடுவச்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கோவை நிர்மலா மகளிர் கல்லூரி மற்றும் சென்னை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சார்பில்

நடைபெற்ற கருத்தரங்கை சின்னரிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் டி.சரவணன் துவக்கி வைத்தார்.

÷இதில் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம், மண்புழு உரம் தயாரித்தல், இயற்கை விவசாயத்திற்கான அரசு மானியம் பெறுதல் பற்றி விளக்கம் தரப்பப்பட்டது.

மேலும் அமுதக் கரைசல், பஞ்சகாவியா, பழ டானிக், அரபு டானிக், மூலிகை பூச்சிக் கொல்லி தயாரித்தல் பற்றிய செயமுறை பயிற்சி அளிக்கப்பட்டது.

**பயறு வகை சாகுபடி பயிற்சி**

First Published : 27 Feb 2011 11:54:56 AM IST

அரவக்குறிச்சி, பிப். 26: விவசாயிகளுக்கான பயறுவகை சாகுபடி குறித்த பயிற்சி வெஞ்சமாங்கூடலூர் கீழ்பாகம் ஊராட்சி நந்தனூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் கரூர் வேளாண் இணை இயக்குநர் அலுவலக வேளாண் அலுவலர் (மத்திய திட்டங்கள்) தங்கவேல், மத்தியத் திட்டங்கள், பயறு வகை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

மேலும், பயறு வகைகளைத் தாக்கும் பூச்சி, நோய்கள், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து அரவக்குறிச்சி வட்டார வேளாண் துணை அலுவலர் இரா. ராஜேந்திரன் விளக்கினார்.

இதில் 100 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நெல், பயறு வகைகள்,எண்ணெய் வித்துகள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த புத்தகம், விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு வெஞ்சமாங்கூடலுர் கிழக்கு ஊராட்சி மன்றத் தலைவர் சாந்தி சிவாஜி முன்னிலை வகித்தார்.

முன்னதாக, அரவக்குறிச்சி வட்டார வேளாண் அலுவலர் க. வெங்கடேசன் வரவேற்றார். உதவி வேளாண் அலுவலர் சதீஷ் நன்றி கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் முத்துச்செல்வன், ராஜேஷ்கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**மரக்கன்றுகள் நடும் விழா**

First Published : 27 Feb 2011 02:07:21 PM IST

காஞ்சிபுரம், பிப். 26: கே.எம்.கல்வி அறக்கட்டளை மற்றும் காஞ்சிபுரம் பல்லவன் நகர அரிமா சங்கம் இணைந்து நடத்திய மரக்கன்றுகள் நடும் விழா மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கருத்தரங்கு சனிக்கிழமை நடைபெற்றது.

÷இந்நிகழ்ச்சிக்கு பல்லவன் நகர அரிமா சங்கத் தலைவர் காஞ்சி சி.குப்புசாமி தலைமைத் தாங்கினார். ஸ்ரீ கற்பகா பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக அலுவலர் எம்.துரை, தலைவர் எம்.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். செயலர் எம்.சேகர், பொருளர் ஆர்.வி.இந்திரஜித் உள்ளிட்ட பலர் பேசினர்.

÷இந்நிகழ்ச்சியில் கற்பகா பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைப்பெற்றன.

## 3.43 லட்சம் டன் நெல் கொள்முதல்

First Published : 27 Feb 2011 12:14:04 PM IST

திருவாரூர், பிப். 26: திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 3.43 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றார் மாநில பால் வளத் துறை அமைச்சர் உ. மதிவாணன்.

திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், தப்பளாம்புலியூர் ஊராட்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் ரூ. 13 லட்சத்தில் புதிதாகக் கட்டப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடத் திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

கட்டடத்தை திறந்து வைத்து அமைச்சர் பேசியது:

தமிழக அரசு விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்ய திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 379 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்துள்ளது. இதன் மூலம் இதுவரை 3.43 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சன்ன ரக நெல் குவிண்டாலுக்கு ரூ. 1,100, பொது ரக நெல் குவிண்டாலுக்கு ரூ. 1,050 என்ற விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது.

மேலும், தப்பளாம்புலியூர் பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இங்கு ரூ. 13 லட்சத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்துக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

நெல் கொள்முதலில் முறைகேடுகள் நடைபெறாமல் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, விவசாயிகள் தங்களது நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொண்டு வந்து விற்பனை செய்து பயன் பெறலாம் என்றார் மதிவாணன்.

விழாவில் நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் டி. தியாகராஜன், ஊராட்சித் தலைவர் ராஜலட்சுமி மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் பங்கேற்றனர்.

**நெற்குணத்தில் வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு**

First Published : 27 Feb 2011 11:51:16 AM IST

பெரம்பலூர், பிப். 26: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள நெற்குணம் கிராமத்தில், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம், கோயம்புத்தூர் இந்திய பருத்தி ஆராய்ச்சிக் கழகம் சார்பில், ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம் என்ற திட்டத்தின் கீழ், சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்வெளிகளை வேளாண் விஞ்ஞானிகள் வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

வேப்பந்தட்டை ஆராய்ச்சி மையத் தலைவர் ஆர். கவிமணி, வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து, விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் எம். சந்திரசேகரன், பருத்தி ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் பே. பாரதிகுமார், வேப்பந்தட்டை வேளாண் அலுவலர் ஏ. ராஜேந்திரன், வேளாண் அறிவியல் மைய பயிர் பாதுகாப்பு வல்லுநர் சி. சங்கர் ஆகியோர் தலைமையிலான வேளாண் விஞ்ஞானிகள் நெற்குணம் கிராமத்தை பார்வையிட்டு, திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்தனர்.

பின்னர் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பருத்தி ஆராய்ச்சி மையத் தலைவர் ஆர். கவிமணி பேசியது:

நெற்குணம் கிராமத்தில் ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 300 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பருத்தி சாகுபடி குறித்த தொழில்நுட்பங்கள், சுற்றுச்சூழல் மாசற்ற பூச்சி கொல்லி உபயோகம், விற்பனை தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

பருத்தியில் மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்த ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் பூச்சிக்கொல்லி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அது விரைவில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

திருச்சி வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து கொண்டுவரப்பட்டும் விநியோகம் செய்யப்படுகிறது. தேவைப்படுவோர் அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், திட்ட மேற்பார்வையாளர் ஆர். செந்தில்குமார், வேளாண் அறிவியல் மைய பருத்தி முதல்நிலை ஆய்வாளர் பி. சரவணன், திட்ட களப் பணியாளர் ஏ.ஆர். செல்வராஜ், மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**சொட்டுநீர் பாசன மானியம்: சிறப்புப் பிரிவு விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

First Published : 27 Feb 2011 10:17:26 AM IST

திருப்பூர், பிப். 26: வேளாண்மை பொறியியல் துறை சார்பில் அளிக்கப்படும் சொட்டு நீர் பாசன மானியத்தைப் பெற சிறப்புப்பிரிவு விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை: வேளாண்மை பொறியியல்துறை திருப்பூர், தாராபுரம் அலுவலகங்கள் சார்பில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் சிறப்புப் பிரிவு (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்) விவசாயிகள் 65 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம் அமைத்திடவும், மாதிரி சொட்டுநீர் பாசனத்திடல் 100 சதவீத மானியத்தில் அமைத்திடவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

÷பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஆயக்கட்டு பகுதிகளில் விவசாய நிலம் உள்ள தாராபுரம், காங்கயம், மடத்துக்குளம் தாலுகா சிறப்பு பிரிவு விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 85. தளவாய்ப்பட்டணம் சாலை, டிஎஸ்பி அலுவலகம் எதிரில், தாராபுரம் - 638 656 என்ற முகவரியிலும், திருப்பூர், பல்லடம், உடுமலை தாலுகா சிறப்புப் பிரிவு விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, பல்லடம் சாலை, தென்னம்பாளையம், திருப்பூர் - 641 604 என்ற முகவரியிலும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 0421 -2211580 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**உணவுக்கு உறுதி அளிக்கும் திட்டம் விரைவில் சட்டமாக்கப்படும்: சிதம்பரம்**

First Published : 28 Feb 2011 02:55:20 AM IST




காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முன்னாள் மத்திய அமைச்சர் தியாகி ஓ.வி.அளகேசனார் நூற்றாண்டு விழாவில் பேசுகிறார் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். உடன் (இடமி

காஞ்சிபுரம், பிப். 27: இந்தியாவில் அனைத்துக் குடும்பங்களுக்கும் பொது விநியோக முறையில் 35 கிலோ கோதுமை, 35 கிலோ அரிசி வழங்கும் வகையில் உணவுக்கு உறுதி அளிக்கும் திட்டம் விரைவில் சட்டமாக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

காஞ்சிபுரத்தில் முன்னாள் காங்கிரஸ் தலைவர் மற்றும் மத்திய அமைச்சராக இருந்த ஓ.வி.அளகேசனார் நூற்றாண்டு நிறைவு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.வீ. தங்கபாலு தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் பெ.விஸ்வநாதன் முன்னிலை வகித்தார். இந் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் பேசியது:

தகவல் அறியும் உரிமைச் சட்டம், மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம், கட்டாய கல்வித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களுக்கு பொது விநியோக முறையில் 25 கிலோ அரிசி, 25 கிலோ கோதுமை வழங்கும் திட்டத்தை அமல்படுத்தி சட்டமாக்க முடிவு செய்தோம்.

தற்போது அதனை காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி 35 கிலோ அரிசி, 35 கிலோ கோதுமை என உயர்த்தி அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார். இச்சட்ட வரைவு பரிசீலனையில் உள்ளது. உணவுக்கு உறுதி அளிக்கும் திட்டம் விரைவில் சட்டமாக இயற்றப்படும்.

சிறு தவறுகள் நடந்திருக்கலாம்: ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் காமன்வெல்த் ஊழல் போன்ற ஏதேனும் சில தவறுகள் நடந்திருக்கலாம். அதற்கு மத்தியிலும் இந்தியா வளர்ச்சி அடைந்துள்ளது.

காமன்வெல்த் போட்டியில் 101 தங்கங்களை இந்தியா பெற்றுள்ளது. உலகப் பொருளாதாரம் சரிந்து பல வங்கிகளும், சில நாடுகளும் திவாலான வேளையில் இந்தியா 8 சதவீத வளர்ச்சி பெற்றது.

கடந்த பா.ஜ.க. அரசில் 5.8 சதவீத வளர்ச்சி பெற்ற இந்தியா தற்போதுள்ள காங்கிரஸ் அரசில் 8.5 சதவீத வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த வளர்ச்சியில்தான் விவசாயக் கடன் தள்ளுபடி, கல்விக் கடன், ஊரக வேலை உறுதித்திட்டம் ஆகியவற்றை செயல்படுத்த முடிந்தது.

தற்போது பொருளாதார வளர்ச்சியில் அமெரிக்கா முதல் இடத்திலும், ஜப்பானை பின்னுக்கு தள்ளி சீனா 2-ம் இடத்திலும், ஜப்பான் மூன்றாம் இடத்திலும் உள்ளன. இந்தியா 6-ம் இடத்தில் உள்ளது.

2050-ம் ஆண்டு இந்தியா முதலிடத்துக்கு வரும். மும்பையில் தாக்குதல் நடந்துபோது நான் உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றேன். அதற்குப் பின்னர் புனேவில் ஒரு தாக்குதலும், ஒரு சிறு குண்டு வெடிப்பும் மட்டுமே நிகழ்ந்துள்ளது.

தனி நாடு கோரிக்கை வைத்துப் போராடி வந்த வடக்கிழக்கு மாநிலங்களில் உள்ள பிரிவினைவாதிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். அவர்களையும் அரசியல் நீரோட்டத்தில் கலக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

ஒரு இலை உதிர்ந்தால் இரு இலை துளிர்க்கும்: பட்டமரம்தான் அப்படியே இருக்கும். பச்சை மரத்தில் ஒரு இலை உதிர்ந்தால் இரு இலை துளிர்க்கும். காங்கிரஸ் பட்டமரம் கிடையாது, பச்சைமரம். அதனால் இதில் உதிரும் இலை குறித்து யாரும் கவலைப்பட வேண்டாம். ஒரு இலை உதிர்ந்தால்தான் இரு இலை துளிர்க்கும். எனவே காங்கிரஸ் கட்சிக்கான அடுத்த தலைமுறையை அடையாளம் காட்டத்தான் நாங்கள் இளைஞர் காங்கிரஸ், மாணவர் காங்கிரப்ஸ உருவாக்கி வைத்துள்ளோம் என்றார் ப.சிதம்பரம்.

இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர்கள் யசோதா, செல்வப்பெருந்தகை, மாவட்ட பொதுச் செயலர் எஸ்.எல்.என்.எஸ். விஜயகுமார், காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் ஆர்.வி.ரஞ்சித்குமார், காஞ்சிபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாணவர் பிரிவு ஜெயபெருமாள்போஸ், மூத்த காங்கிரஸ் தலைவர் பன்னீர்செல்வம், நகர்மன்ற உறுப்பினர் அரங்கநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 28 Feb 2011 02:47:36 AM IST



சென்னை, பிப். 27: தமிழகம், புதுவையில் திங்கள்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் தென் தமிழகம்- கிழக்கு இலங்கை இடையே, மேகக் கூட்டங்களிடையே ஏற்பட்டுள்ள சுழற்சி காரணமாக வடதமிழகம், புதுவையில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்யக் கூடும்.

கேரளம், கர்நாடகம், ஆந்திரம், லட்சத்தீவுகளிலும் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. பெரியநாயக்கன்பாளையத்தில் 120 மில்லி மீட்டர் மழை மாநிலத்திலேயே அதிகபட்சமாக கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையத்தில் 120 மில்லி மீட்டர் அளவுக்கு மழை கொட்டியது. இதற்கு அடுத்தபடியாக மேட்டுப்பாளையத்தில் 70 மில்லி மீட்டர் அளவு மழை பெய்தது.

÷இதர முக்கிய இடங்களில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவாகியுள்ள மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்):

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி 40, செங்கோட்டை, கோயம்புத்தூர், தேவாலா 20, தென்காசி, பவானி, ஈரோடு, சத்தியமங்கலம், குன்னூர் 10. சென்னையில்... திங்கள்கிழமை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

**பருத்தி அபிவிருத்தி திட்டம்: விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,00:24 IST

தர்மபுரி: தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையம் சார்பில் சாகுபடி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது.பயிற்சியை வேளாண்மை இணை இயக்குனர் துரைசாமி துவக்கி வைத்தார். வேளாண்மை துணை இயக்குனர் மேகநாதன் பேசியதாவது: பருத்தி மினி மிஷன் 2 தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டத்தில் 2010-11ன் கீழ் தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் மூலம் செயல்படுத்தப்படும் தீவிர பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் பருத்தியை

மானாவாரியில் சாகுபடி செய்யமால் இறவையில் பயிரிட்டு நன்கு பராமரிப்பு செய்தால் அதிக லாபம் பெறலாம். பி.டி., பருத்தி அதிகம் சாகுபடி செய்வதால் புழுவிற்காக மருந்தடிக்கும் செலவு சற்று குறைந்துள்ளது. ஆனால், சாறு உறுஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகள் அதிக அளவு மருந்தினை பயன்படுத்துகிறார்கள். இதனால், செடியில் இருக்கும் நன்மை செய்யும் பூச்சிகள் அழிக்கப்படுகிறது. விவசாயிகள் நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாக்க வேண்டும். பூச்சிகள் அழியாமல் இருக்கும் வகையிலான மருந்துகளை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். உதவி பேராசிரியர்கள் சரவணன், சண்முகம் மற்றும் 120க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**சம்பங்கி விலையில் வீழ்ச்சி விவசாயிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,02:06 IST

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் சம்பங்கி பூ விலை குறைந்ததால் விவசாயிகள் வருத்தமடைந்துள்ளனர்.
சத்தியமங்கலம் பகுதியில் 5,000 ஏக்கருக்கு மேல் சம்பங்கி பயிரிடப்பட்டுள்ளது. தினமும் இப்பகுதியில் இருந்து நான்கு டன் சம்பங்கி பூவுக்கு மேல் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது.தற்போது சம்பங்கி விளைச்சல் ஓரளவு இருந்தாலும் அதன் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் சம்பங்கி விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.முகூர்த்த காலங்களில் கிலோ ஒன்று 250 ரூபாய் வரை விற்பனையாகும் மற்ற நேரங்களில் கிலோ ஒன்று 50 ரூபாய்க்கு விற்பனையாகிறது.சம்பங்கி விவசாயி பெரியகுளம் சம்பத் கூறுகையில்,""தற்போது சம்பங்கி பூ என்பது முக்கியமானதாக விளங்குகிறது.எந்த பூவில் மாலை தொடுத்தாலும் சம்பங்கி மாலைபோல் நறுமணமும், அழகும் வருவதில்லை. ஆனால் சம்பங்கி பூவுக்கு போதிய விலை கிடைக்காதது விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கிறது,'' என்றார்.

**நெல் கொள்முதலுக்கு உடனடி பணம் பட்டுவாடா**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,02:01 IST

ஈரோடு: "நெல் கொள்முதல் நிலையத்தில், உடனடியாக பணம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்' என, விவசாயிகள் வலியுறுத்தி பேசினர்.ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் வேளாண் குறைதீர் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., குமரவேல் பாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண்

இணை இயக்குனர் அக்பர் தலைமை வகித்தார். விவசாய சங்க பிரதிநிதிகள் பேசியதாவது:கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி: திருப்பூரில் சாயப்பட்டறைகளுக்கு சீல் வைக்கப்பட்டாலும், நொய்யல் ஆற்றில் தொடர்ந்து சாயக்கழிவு வருகிறது. மேட்டூர் வலதுகரை வாய்க்கால் சங்கத் தலைவர் மோகன்: நெல்லுக்கு உரிய விலை கிடைப்பதில்லை; மேட்டூர் - பவானி சாலையை சீர் செய்ய வேண்டும்.தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் பெரியசாமி: நுகர்பொருள் வாணிப கழகத்தில் நெல் மூட்டைகள் தேங்கி கிடக்கின்றன. உடனடியாக பணம் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்பூரில் சாயப்பட்டறைகள் மூடப்பட்டதால், அங்கிருந்து வரும் நூலுக்கு இங்கு சாயமேற்றப்படுகிறது. நுகர்பொருள் வாணிப கழக அதிகாரி: ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையத்துக்கும் தினமும் நான்கு லட்சம் முதல் எட்டு லட்சம் ரூபாய் வரை கொடுக்கிறோம். நெல் வரத்து அதிகமாகிறது. பெருந்துறை, சிவகிரி குடோனில் நெல் மூட்டைகள் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் அனைவருக்கும் பணம் பட்டுவாடா செய்யப்படும்.தடப்பள்ளி அரக்கன்கோட்டை சங்கத் தலைவர் தளபதி: ஆயக்கட்டு பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டுள்ளது. சிலர் கால்வாய்களை மூடி நிலம் விற்பனை செய்கின்றனர். சுற்றுச்சுவரும் எழுப்பி விடுவதால், விவசாயிகள் தங்கள் பாசன நிலங்களுக்கு செல்ல முடிவதில்லை. விளை நிலங்களையும் பிரித்து விற்பனை செய்கின்றனர். டி.ஆர்.ஓ.,: விளை நிலங்களில் வீட்டுமனை கட்டுவதற்கு அங்கீகாரம் தருவதில்லை. வாய்க்கால்களை மூடினால் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும்.காலிங்கராயன் பாசன சபை தலைவர் வேலாயுதம்: ஏப்ரல் 30ம் தேதி வரை காலிங்கராயனில் தண்ணீர் திறந்து விட வேண்டும். காலிங்கராயன் வாய்க்காலை ஆக்கிரமித்திருந்த 200 லோடு செடிகளை அகற்றிய பொதுப்பணித்துறைக்கு நன்றி.இவ்வாறு விவாதம் நடந்தது.

**புகையிலை விலை சரிவு: வெற்றிலை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,02:03 IST

கோபிசெட்டிபாளையம்: அதிக விளைச்சல் காரணமாக புகையிலை விலை குறைந்தது; கடும் பனி காரணமாக வெற்றிலை விலை பல மடங்கு அதிகரித்தது. கோபி மற்றும் நம்பியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் புகையிலை பயிரிடப்படுகிறது. 110 நாள் பயிரான புகையிலையை நம்பியூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிகளவில் பயிரிடுகின்றனர். சென்றாண்டு ஒரு கிலோ புகையிலை 50 ரூபாயை எட்டியது. செப்டம்பர் மாதம் பெய்த கனமழையால், கோபி மற்றும் நம்பியூர் வட்டார பகுதிகளில் அதிகளவில் புகையிலை

பயிரிடப்பட்டது. தற்போது அறுவடை சீஸன் துவங்கியுள்ளது. புகையிலை வரத்து அதிகரித்துள்ளதால் ஒரு கிலோ புகையிலை 30 ரூபாய் வரை விலை போகிறது. அதிக விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் புகையிலையை அதிகளவில் விவசாயிகள் பயிரிட்டனர். "சென்றாண்டு பயிரிட்ட புகையிலை இன்னும் ஸ்டாக் இருக்கும் பட்சத்தில் திடீரென விலை குறைந்துள்ளதால்' புகையிலை பயிரிட்ட விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர். அந்தியூர், தர்மபுரி, சேலம், திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மூன்று மாதங்களாக வீசிய கடும் பனியால் வெற்றிலை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டது. மார்க்கெட்டில் வெற்றிலை விலை பல மடங்கு உயர்ந்தது. இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு கவுளி (40 வெற்றிலை) 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விற்றது. தற்போது, 40 முதல் 50 ரூபாய் வரை வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. பீடா கடைகளில் ஒரு வெற்றிலை 1.50 ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. திருமண சீஸன் துவங்கியுள்ள நிலையில் வெற்றிலை விலை மேலும் உயரக்கூடும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,00:33 IST

ஆனைமலை : ஆனைமலை வட்டார பகுதிகளில் விதை கிராம திட்டத்தின் கீழ் வேளாண்மைத்துறையினரால் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.ஆனைமலை மற்றும் சுற்றியுள்ள கிராம விவசாயிகளுக்கு வேளாண்மை துறையினரால் நெல், நிலக்கடலை பயிர்களுக்கான நேரடி பயிற்சிகள் அந்தந்த கிராமப்பகுதிகளில் நடந்து வருகிறது. இவற்றுக்கு மூன்று கட்டங்களாக விதைப்பு பருவம், பூக்கும் பருவம், அறுவடை பருவம் என பயிற்சியளிக்கப்படுகிறது. தற்போது நிலக்கடலை பூக்கும் பருவத்தில் இருப்பதால் இரண்டாம் கட்ட பயிற்சி காளியாபுரம் பகுதியில் நடந்தது. உதவி வேளாண்மை இயக்குநர் உமாராணி, வேளாண்மை அலுவலர் சாந்தாமணி, விதைச்சான்று அலுவலர் இளங்கோ, துணை வேளாண்மை அலுவலர் மாணிக்கம், உதவி வேளாண்மை அலுவலர்கள் சந்திரன், சகாபுதீன், செல்வக்குமார் ஆகியோர் பயிற்சியளித்தனர்.உதவி வேளாண்மை இயக்குநர் உமாராணி கூறியதாவது : விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்து விற்பனை செய்வதன் மூலம் அதிக லாபத்தை அடையும் வாய்ப்புள்ளது. தைகளுக்காக வேளாண்மை அலுவலகங்களையோ, மற்றவர்களையோ சார்ந்திருக்க வேண்டியதில்லை. ஆனைமலை பகுதிகளில் நிலக்கடலை பூக்கும் பருவத்தில் இருப்பதால் துரு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த நோய் தாக்கியவர்கள் உடன டியாக வேளாண்மை அலுவலகத்தை அணுகி நோயை கட்டுபடுத்த ஆலோ சனை பெறலாம். ஆலோசனை பெற்று உற்பத்தி செய்தால் அதிக விளைச்சல் தரும் என்றார்.

**குறிஞ்சி மரபணு பூங்கா: ஏற்காட்டில் பணிகள் துவக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,02:19 IST

சேலம்: ""ஏற்காட்டில் அமைக்கப்படும், குறிஞ்சி பாரம்பரிய மரபணு பூங்கா பணிகள் நான்கு மாதங்களில் முடிவடையும்," என கலெக்டர் சந்திரகுமார் பேசினார்.குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பாரம்பரிய மரபணு பூங்காவிற்கான பணிகள் துவக்க விழா, சென்னை தலைமை செயலகத்தில் நடந்தது. தமிழக முதல்வர் கருணாநிதி, வீடியோ கான்பரன்ஸிங் மூலம் பணிகளை துவக்கி வைத்தார். வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தலைமை வகித்தார்.ஏற்காடு கலையரங்கில் நடந்த நிகழ்ச்சிக்கு, கலெக்டர் சந்திரகுமார் முன்னிலை வகித்தார். அப்போது அவர் பேசியதாவது:கோவையில் நடந்த உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் நிறைவு விழாவில், "சங்க காலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாக பிரிக்கப்பட்டிருந்தது. தற்போது, ஐந்து இடங்களில் இவ்வகையான மரபணு பூங்காக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என தமிழக முதல்வர் தெரிவித்தார்.மலையும், மலையும் சார்ந்த இடமுமான ஏற்காட்டில், குறிஞ்சி மரபணு பூங்கா அமைக்க மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை மேற்கொண்டது. ஏற்காடு பகுதியில், தோட்டக்கலைத்துறை மூலம், 73.17 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, முதற்கட்ட பணிக்காக, 8.57 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.ஐந்து வகை நிலமும், அறுவகை பெரும்பொழுதும், சிறு பொழுதும் முதற்பொருள் என்றும் தெய்வம் முதல் யாழ் ஈறான பதினான்கும் கருப்பொருள் என்றும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களுக்கு முறையே உள்ள கூடல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என உரிப்பொருளாக கொண்டு இயற்கையோடியைத்த இயல்பு வாழ்வு வாழ்ந்தனர் தமிழர் என சங்க இலக்கியங்கள் கூறுகிறது.குறிஞ்சி மரபணு பூங்கா பணிகள் நான்கு மாதங்களுக்குள் முடிக்கப்படும். சேலம் மாவட்டத்தில், தமிழக அரசின் திட்டங்கள் அனைத்தும் முழுமையாக அனைவருக்கும் சென்றடையும் வகையில் நிறைவேற்றப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.டி.ஆர்.ஓ., பழனிசாமி, எம்.பி., ஆதிசங்கர், எம்.எல்.ஏ., தமிழ்செல்வன், ஆர்.டி.ஓ., பிரசன்னராமசாமி, ஏற்காடு ஒன்றிய தலைவர் பழனியம்மாள், தோட்டக்கலைத் துணை இயக்குனர்(பொறுப்பு) கலைச்செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கால்நடைகளுக்கு காப்பீடு செய்ய கலெக்டர் அழைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,02:14 IST

சேலம்: கலெக்டர் சந்திரகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:கால்நடை வளர்ப்போர், விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு கால்நடை காப்பீட்டு திட்டத்தை, தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த நிதி ஆண்டில் சேலம் மாவட்டத்தில் மட்டும், 10 ஆயிரம் கறவை மாடுகளுக்கு காப்பீடு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் கறவை மாடுகளை, காப்பீடு செய்வதால், கால்நடை இழப்பை ஈடுகட்டுவதோடு மட்டுமின்றி, குடும்ப வருவாயிலும் குறைவு ஏற்படாமல் தவிர்க்கலாம்.கால்நடைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில், காப்பீட்டு தொகையில், 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. கால்நடை வளர்ப்போர், கால்நடை பராமரிப்பு துறையின் அனைத்து கால்நடை மருந்தகங்கள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்களில் உள்ள கால்நடை டாக்டர்களை அணுகி, கறவை மாடுகளுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம்.இத்திட்டம் மார்ச் மாதத்துக்குள் முடிவடைவதால், கறவை மாடுகளை இத்திட்டத்தின் மூலம் காப்பீடு செய்து பயனடைய வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விதை பரிசோதனை நிலைய முகவரி மாற்றம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,02:41 IST

தூத்துக்குடி:தூத்துக்குடி விதை பரிசோதனை நிலையம் நாளை முதல் புதிய முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.தமிழ்நாடு அரசு விதை சான்றுத்துறையின் கீழ் தூத்துக்குடியில் பெரியநாயகிபுரம் (கலெக்டர் அலுவலகம் பஸ்ஸ்டாப்) எம்எஸ்பி காம்ப்ளக்ஸ் பின்புறம் என்ற முகவரியில் செயல்பட்டு வந்த விதை பரிசோதனை நிலையம் தூத்துக்குடி மாவட்ட விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் வசதிக்காக நாளை 1ம் தேதி விதை பரிசோதனை நிலையம், வேளாண் வளாகம், மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம், கோரம்பள்ளம் அரசு கட்டிடத்தில் செயல்படும். எனவே தூத்துக்குடி மாவட்ட விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் விதை மாதிரிகளுடன் ரூ.30 கட்டணம் செலுத்தி விதை பரிசோதனை செய்து கொள்ளலாம் என விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் கலைச்செல்வி மற்றும் நெடுஞ்செழியன் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**தக்காளி வரத்து அதிகரிப்பால் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,02:21 IST

சேலம்: சேலம் மாவட்டத்தில் தக்காளி விளைச்சல் அதிகரிப்பு காரணமாக, மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளது. கடந்த மாதம் வரை உச்சத்தில் இருந்த தக்காளி விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. சேலத்துக்கு தம்மம்பட்டி, மல்லூர், வாழப்பாடி, அயோத்தியாபட்டணம், தாரமங்கலம், இளம்பிள்ளை, அரியானூர் ஆகிய இடங்களில் இருந்து தக்காளி விற்பனைக்கு வரும். கடந்த சில மாதங்களாக தக்காளி வரத்து மிகவும் குறைந்து இருந்தது. தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை, அரூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் இருந்தும் சேலத்துக்கு தக்காளி வரத்து முற்றிலும் நின்று விட்டது. இதனால், சேலம் உழவர்சந்தையிலும், வெளி மார்க்கெட்டிலும் தக்காளி பழத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை கடுமையாக உயர்ந்தது. கடந்த மாதம் நாட்டுத் தக்காளி உழவர் சந்தையில் கிலோ, 36 ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில், 42 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. நாட்டுத்தக்காளி விலை உயர்வை அடுத்து, ஹைபிரிட் மற்றும் பெங்களூரு தக்காளி விலையும் உயர்வு ஏற்பட்டது. இந்த வகை தக்காளி கிலோ, 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, சேலம் மாவட்டத்தின் புறநகர் பகுதிகளில் தக்காளி சீஸன் தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக சேலம் மார்க்கெட், உழவர் சந்தைக்கு தக்காளி வரத்து உயர்வு ஏற்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு, ராயக்கோட்டை, அரூர் மற்றும் கிராமப் பகுதிகளில் தற்போது தக்காளி விளைச்சல் இரட்டிப்பு அடைந்து உள்ளது. இப்பகுதியில் இருந்து சேலத்திற்கு நாள் ஒன்றுக்கு, ஐந்து லோடு தக்காளி பழங்கள் விற்பனைக்கு வருகிறது. மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரிப்பால் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.நேற்று உழவர் சந்தையில் கிலோ, நான்கு ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில் கிலோ, ஐந்து ரூபாய்க்கும் விற்றது. ஹைபிரிட் தக்காளி பழம் கிலோ, எட்டு ரூபாய்க்கு விற்கிறது.இது குறித்து உழவர்சந்தை விவசாயி சீனிவாசன் கூறியதாவது:தக்காளி பழத்தின் விளைச்சல் எதிர்பார்த்தை விட உயர்ந்துள்ளது. மார்க்கெட்டுக்கு நாள் ஒன்றுக்கு, 10 டன் தக்காளி பழங்கள் விற்பனைக்கு வருகிறது. வரத்து அதிகரிப்பால் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.விளை நிலங்களில் இருந்து அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டு வரும் செலவுக்கு கூட, விலை கிடைப்பது இல்லை. எனவே, விவசாயிகளின் நலன் கருதி சேலம் மாவட்டத்தில் தக்காளி பதப்படுத்தும் ஆலையை அரசு ஏற்படுத்தி தரவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**பொள்ளாச்சியில் பெய்யும் திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி: அணைகளின் நீர் மட்டம் உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,00:30 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சியில் சமவெளி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மூன்று நாட்களாக மழை பெய்து வருவதால், அணைகளின் நீர் மட்டம் உயரத்துவங்கியுள்ளது. மழையால், விவசாய பணிகளும் சூடுபிடிக்க துவங்கியுள்ளன.பொள்ளாச்சி, ஆனைமலை, வால்பாறை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. சமவெளிப்பகுதிகளை விட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்யும் கனமழையால், பி.ஏ.பி., தொகுப்பு அணைகள் அனைத்திலும் நீர்மட்டம் மெல்ல, மெல்ல உயரத்துவங்கியுள்ளது. குறிப்பாக, ஆழியாறு அணைக்கட்டு, கனமழையால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மற்ற பகுதிகளில் மழைப்பொழிவு குறைந்திருப்பினும் நீர்வரத்து சீராக உள்ளது. சோலையாறு அணையின் 160 அடி உயரத்தில் 31.16 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 151 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. அணையிலிருந்து தண்ணீர் வெளியேறுவது தடை செய்யப்பட்டுள்ளது. பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில் 56.57 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 55 கனஅடி தண்ணீர் வரத்தாக உள்ளது. அணையில் தண்ணீர் 425 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில் 104.90 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 160 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 14 கன அடி தண்ணீர் வெளியேற்றமாகிறது. திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில் 38.99 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 604 கனஅடி தண்ணீர் வரத்தாகவும், 18 கன அடி தண்ணீர் அணையிலிருந்து வெளியேற்றமாகவும் உள்ளது. அமராவதி அணையின் 90 அடி உயரத்தில் 45.08 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 13 கனஅடி தண்ணீர் வரத்தாகவும், 801 கன அடி தண்ணீர் வெளியேற்றமாகவும் உள்ளது.கோடை காலத்தில், திடீரென பெய்யும் மழையால், மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனைமலை, பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில் விவசாய பணிகள் சூடுபிடிக்க துவங்கியுள்ளன. விவசாயிகள் காய்கறி, பயிர் வகைகளை பயிரிடுவதில் ஆர்வம் காட்டத்துவங்கியுள்ளனர். ஒரு சில பகுதிகளில் நிலத்தை மேம்படுத்தும் பணி நடக்கிறது. பொள்ளாச்சி தாலுகாவில், விவசாய பணிகள் முழுவீச்சில் நடக்கிறது.நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு (மி.மீ.,): பரம்பிக்குளம்- 11, ஆழியாறு - 32.5, மேல்நீராறு - 3, கீழ்நீராறு- 2, மேல் ஆழியாறு - 5.5, வால்பாறை - 13, பொள்ளாச்சி- 6.6, மணக்கடவு- 1.8, நல்லாறு- 1, நவமலை - 1, தூணக்கடவு - 16, பெருவாரிபள்ளம் - 18, சர்க்கார்பதி - 28. படகு சவாரிக்கு தடை: ஆழியாறு அணைக்கட்டு பகுதியில் இரு நாட்களாக அதிகளவு மழை பெய்கிறது. இதனால், அணையின் நீர் மட்டம் உயர்வதுடன், வறட்சியுடன் காணப்பட்ட மங்கிபால்சிலும் நீர் வரத்து சீராக உள்ளது.

ஆழியாறுக்கு வரும் சுற்றுலா பயணிகள் மங்கி பால்சில் குளிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். அதேசமயம் மழையுடன், பலத்த காற்றும் வீசுகிறது. ஆழியாறு அணையில் படகு சவாரி மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. மழை பொழிவு முற்றிலும் குறைந்து, காற்று இல்லாத நேரத்தில் படகு சவாரி மேற்கொள்ள பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மழை பொழிவு காரணமாக ஆழியாறு இரு நாட்களாக பயணிகள் வருகை குறைந்துள்ளது.

**மானிய விலையில் ஜிப்சம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,00:22 IST

காங்கயம் : "நத்தக்காடையூர் பகுதியில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படும்,' என, காங்கயம் வேளாண் உதவி இயக்குனர் மாணிக்கம் தெரிவித்துள்ளார்.இவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நத்தக்காடையூர், குட்டப்பாளையம், பழைய கோட்டை, மரவாபாளையம், மருதுறை ஆகிய வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட கிராமங்களில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இப்பகுதிகளுக்கு ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து இரண்டாம் போக பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நிலக்கடலை, எள், மக்காச்சோளம், சூரியகாந்தி ஆகிய பயிர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். காங்கயம் வேளாண் துறை சார்பில் 2010-11ம் ஆண்டுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுகிறது.ஒரு ஹெக்டர் அளவிலான நிலக்கடலை பயிர்களுக்கு 400 கிலோ வீதம் ஜிப்சம் வழங்கப்படுகிறது. காங்கயம் மற்றும் நத்தக்காடையூர் வேளாண் விரிவாக்க மையங்களில் ஜிப்சம் வினியோகிக்கப்படுகிறது, என்று தெரிவித்துள்ளார்.

**மானிய விலையில் விவசாயிக்கு உரம் வழங்கல்: அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 27,2011,01:42 IST

குளித்தலை: "தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயிரிட்டுள்ள பயிர்களுக்கு ராபி பருவத்தில் தெளிப்பதற்கான டி.ஏ.பி., உரம் கரைசல் மானிய விலையில் வழங்கப்படுகிறது' என குளித்தலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் சேகர் தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை: குளித்தலை வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயிர் வகை பயிர்களுக்கு ராபி பருவத்தில் டி.ஏ.பி., கரைசல் விதைத்த 35 மற்றும் 55 நாளில் இருமுறை தெளிப்பதற்காக மானிய விலையில் டி.ஏ.பி., உரம் கரைசல் நங்கவரம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே, பயிர் வகை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் டி.ஏ.பி., உரத்தை மானிய விலையில் பெற்று பயன்பெறலாம்.

**ஈரோடு மாவட்டத்தில் 37 ஆயிரம் டன் நெல் கொள்முதல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 27,2011,01:04 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் 27 நெல் கொள்முதல் நிலையங்களில் 37 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கீழ்பவானி வாய்க்கால் பாசனப் பகுதியில் நெல் அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது.
விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில், தாலுகா வாரியாக 27 கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதம் ஈரப்பதமுள்ள சன்னரக நெல்லுக்கு 11 ரூபாயும், மோட்டாரக நெல்லுக்கு 10.50 ரூபாயும் வழங்கப்படுகிறது. ஈரோடு தாலுகா நசியனூரில் 26 ஆயிரத்து 745 டன், அவல்பூந்துறை 613, எழுமாத்தூர் 1,315, மொடக்குறிச்சி1,057, கொடுமுடி ஒன்று 1,250, கொடுமுடி இரண்டு 506, சிவகிரி ஒன்று 928, சிவகிரி இரண்டு 953 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பெருந்துறை தாலுகா காஞ்சிகோவில் 2,276, வெள்ளோடு 935, கே.ஜி வலசு 889 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கோபிசெட்டிபாளையம் தாலுகாவில், கூகலூர் 2,727, என்.ஜி.பாளையம் 2,540, ஒத்தகுதிரை 2,254,டி.என்.பாளையம் 2,205, கள்ளிபட்டி 660, காசிபாளையம் 769, புதுவள்ளியம்பாளையம் 713, பங்களாப்புதூர் 117 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பவானி தாலுகாவில், அத்தாணி 2,436, பவானி 2,141, அம்மாபேட்டை 783, கவுந்தபாடி 755, பி.மேட்டுப்பாளையம் 557, பெரியபுலியூர் 712, சத்தியமங்கலம் தாலுகா, நாகரணை 2,937, உக்கரம் 759 டன் சேர்ந்து மாவட்டம் முழுவதும் 27 நெல் கொள்முதல் மையங்களில் 36, 462 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 27 கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டது. இதுவரை 37 ஆயிரம் டன் நெல் கொள்முதலாகியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாய கருவிகள் வாங்க நெருக்கடி : வேளாண் வங்கிகள் குற்றச்சாட்டு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 27,2011,01:12 IST

சேலம்: விவசாய கருவிகள் வாங்குமாறு, சேலம் மாவட்ட தொடக்க வேளாண் வங்கிகளுக்கு நெருக்கடி கொடுப்பதாக இணை பதிவாளர் மீது, வங்கி செயலாளர் மற்றும் தனி அலுவலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். தமிழகத்தில் கூலியாட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு போன்ற

காரணங்களால், விவசாய தொழில் பின்னடைவை சந்தித்துள்ளது. எனவே, கிராமப்புறங்களில் செயல்படும் தொடக்க வேளாண் வங்கிகள் மூலம், டிராக்டர், மினி டிராக்டர், பவர் டில்லர், ஹாக்கர், பவர் பிளேயர் போன்ற வேளாண் கருவிகளை வாடகைக்கு விட, அரசு திட்டமிட்டது. இந்த திட்டத்துக்காக, சேலம் மாவட்டத்தில், 90 தொடக்க வேளாண் வங்கிகள் தேர்வு செய்து, "வேளாண் சேவை மையம்" தொடங்கப்பட்டது. அந்த மையத்துக்கு உட்பட்ட பகுதிக்கு தேவையான விவசாய கருவிகளை பட்டியலிட வேண்டும். அதற்கான விலைப்புள்ளி பெற வேண்டும். இந்த தகவல்களுடன், கருவிகள் வாங்குவது தொடர்பான ஆவணத்தை, சரக துணைப் பதிவாளர் மூலம் இணைப்பதிவாளர் பார்வைக்கு அனுப்ப வேண்டும். பரிசீலனைக்கு பின், விவசாய கருவிகள் வாங்கி கொள்ள அனுமதி தரப்படும். இத்தகைய நடைமுறை எதுவும் சேலம் மாவட்டத்தில் பின்பற்றப்படவில்லை என, வேளாண் வங்கி ஊழியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். நிதி ஆதாரம் இல்லாத வேளாண் வங்கிகளையும், " சேவை மையம்' தொடங்க தொடங்க வேண்டும் என்று, வாய்மொழி உத்தரவு பிறப்பித்து, இணைப் பதிவாளர் ரவிச்சந்திரன் கெடுபிடி செய்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இத்திட்டத்துக்கு, மத்திய கூட்டுறவு வங்கியிடம் வட்டியில்லாமல், 20 லட்சம் ரூபாய் வரை கடன் பெற வேளாண் வங்கிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த திட்டத்தை செயல்படுத்துவதில், இணை பதிவாளர் விடாப்பிடியாக இருந்து வருகிறார். எதிர் காலத்தில் பிரச்னை வரும் கருதி, வங்கி செயலாளர்களும், தனி அலுவலர்களும் சாக்கு போக்கு சொல்லி வருவதால், இணை பதிவாளருடன் பனிப்போர் நடந்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுக்கு முன், அரசு அனுமதி, துறை ரீதியான ஒப்புதல் இல்லாமல் தார்ப்பாய், நகை எடை போடும் மிஷின் மற்றும் பீரோ ஆகியன வாங்கப்பட்டது. இந்த செயல், கூட்டுறவு பதிவாளர் கவனத்துக்கு சென்றதும், "எந்த அடிப்படையில் பொருட்கள் வாங்கப்பட்டது?' என, கேள்வி எழுப்பி, சரக துணை பதிவாளர் மூலம், மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கி தனி அலுவலர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை 17 (பி) மேற்கொள்ளப்பட்டது. எனவே, அரசு அனுமதி இல்லாமல், வேளாண் கருவிகள் வாங்க, தனி அலுவலர்கள் மறுத்து வருகின்றனர். புகார் குறித்து, சேலம் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன் கூறுகையில், ""தொடக்க வேளாண் வங்கிச் செயலாளர், தனி அலுவலர் யாரையும் விவசாய கருவிகள் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை. அவர்கள் விருப்பப்படிதான் வாங்குகின்றனர்," என்றார்.

## உள்நாட்டில் சாதகமான சூழ்நிலை நிலவுகிறது முன்னணி சர்க்கரை நிறுவனங்கள் வளர்ச்சிப் பாதைக்கு திரும்புகின்றன

*ஷிகா சர்மா*
*இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு*

*சர்க்கரை துறையைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு உள்நாட்டில் சாதகமான சூழ்நிலை நிலவுகிறது. இதனால் முன்னணி நிறுவனங்கள் வளர்ச்சிப் பாதைக்கு திரும்பி வருகின்றன. இத்துறையைச் சேர்ந்த நிறுவனப் பங்குகள் நடுத்தர கால அடிப்படையிலான முதலீட்டுக்கு ஏற்றவையாக உள்ளன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*கொள்முதல் விலை*

*இந்திய சர்க்கரை நிறுவனங்களுக்கு, கடந்த 2009–10 பருவம் (அக்டோபர்–செப்டம்பர்) சாதகமாக இல்லை. கரும்புக்கான கொள்முதல் விலை அதிகரிப்பால் உற்பத்தி செலவினம் அதிகரித்து நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. ஆனால் கடந்த ஐந்து மாதங்களில் நிலைமை மாறியுள்ளது. கரும்பு கொள்முதல் செலவு குறைந்துள்ளது. மேலும், சர்க்கரை உற்பத்தி முந்தைய மதிப்பீட்டை விட சற்று குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சர்க்கரை விலையில் மேலும் சரிவு ஏற்படாது. இது, நிறுவனங்களின் லாப வரம்பு உயர்வதற்கு வகை செய்யும்.*

*சர்க்கரை விலை*

*அக்டோபர்–டிசம்பர் காலாண்டு நிதி நிலை முடிவுகள் இத்துறை நிறுவனங்கள் மந்தநிலையிலிருந்து மீண்டு வந்துள்ளதை உறுதி செய்துள்ளன. ஐந்து பெரிய நிறுவனங்கள், ஒட்டுமொத்த அளவில் ரூ.179 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளன. அதே சமயம் முந்தைய ஜூலை–செப்டம்பர் காலாண்டில் இந்த நிறுவனங்கள் ரூ.35 கோடியை இழப்பாக கண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. கரும்பு கொள்முதல் விலை 20 சதவீதம் குறைந்து கிலோ ஒன்றுக்கு ரூ.20 என்ற அளவில் வந்ததால் நிறுவனங்கள் லாப பாதைக்கு திரும்பியுள்ளன.*

செப்டம்பர் காலாண்டில் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு சர்க்கரை விலையில் ஏற்பட்ட சரிவே முக்கிய காரணமாகும். சென்ற ஆண்டு ஜனவரி–ஜூலை மாத காலத்தில் சர்க்கரை விலை சுமார் 30 சதவீதம் குறைந்தது. அதே சமயம், சென்ற சர்க்கரை பருவத்தில் கரும்புக்கான கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது. இதனால் ஆலைகளுக்கு கொள்முதல் செலவினம் இரண்டு மடங்கு அதிகரித்தது. மேலும் அரசுக்கு மானிய விலையில் அளிக்கப்படும் சர்க்கரையின் அளவும் (லெவி கோட்டா) 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. இதனால் நிறுவனங்களின் செயல்பாட்டு லாப வரம்பு சரிவடைந்தது.

இனி வரும் காலாண்டுகளில், தென் மாநிலங்களைச் சேர்ந்த நிறுவனங்களின் செயல்பாட்டு லாப வரம்பு வட இந்திய நிறுவனங்களைக் காட்டிலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீரேணுகா சுகர்ஸ் மற்றும் சக்தி சுகர்ஸ் போன்ற நிறுவனங்கள் குறைந்த விலையில் அதிக அளவு கரும்பை வாங்கி இருப்பு வைத்துள்ளதே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. மேலும் வட இந்தியாவில் முன்னணி நிறுவனமான பஜாஜ் இந்துஸ்தானைக் காட்டிலும் இந்த நிறுவனங்களுக்கு சர்க்கரை ஏற்றுமதிக்கான சூழ்நிலை நன்றாக உள்ளது.

புதிய பருவ மதிப்பீடு

சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை சர்க்கரை விலை சரிவடைந்து கொண்டே வந்தது. ஆனால் அம்மாதத்திலிருந்து இன்று வரை 16 சதவீதம் விலை உயர்ந்துள்ளது. மறுமதிப்பீட்டில், நடப்பு பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.60 கோடி டன்னிலிருந்து 2.40 கோடி டன்னாக சரிவடையும் என தெரிவிக்கப்பட்டதே இதற்கு காரணம். நடுத்தர கால அடிப்படையில் ஒரு கிலோ சர்க்கரை விலை ரூ.28–30 என்ற அளவில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய நிலையில் சர்க்கரை ஆலைகள், நடப்பு ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கும் புதிய பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி உள்நாட்டுத் தேவையை விட அதிகமாக இருக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளன. எனினும் கரும்புக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். அப்போதுதான் விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஆர்வம் காட்டுவர். சில தரகு நிறுவனங்கள் அடுத்த பருவத்தில் நம் நாட்டில் சர்க்கரை உற்பத்தி 2.40 கோடி டன் முதல் 2.60 கோடி டன் வரை இருக்கும் என மதிப்பீடு செய்துள்ளன.

பயன்பாடு

உலக அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில், தென் அமெரிக்க நாடான பிரேசில் முதலிடத்தில் உள்ளது. இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. எனினும் சர்க்கரை பயன்பாட்டில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது. உலகம் முழுவதுமாக

110–க்கும் மேற்பட்ட நாடுகளில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. உலகின் மொத்த கரும்பு உற்பத்தியில் பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் பங்களிப்பு 50 சதவீதமாகும். நம் நாட்டில் தற்போது சர்க்கரை பயன்பாடு 2.30 கோடி டன் என்ற அளவில் உள்ளது.

அடுத்த கட்ட மதிப்பீட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படும் வரை சர்க்கரைக்கு ஓரளவு நல்ல விலை கிடைக்கும். கரும்பு கொள்முதல் விலை குறைவாக உள்ளது. மேலும் சர்க்கரை உற்பத்தியின்போது கிடைக்கும் உபபொருளான எத்தனாலுக்கு, நடப்பு பருவத்தில், ஒரு லிட்டருக்கு விலை 28 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ.27–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இவை சர்க்கரை நிறுவனங்களுக்கு சாதகமான அம்சங்களாக உள்ளன.

எத்தனால் உற்பத்தி

மகாராஷ்டிரா மாநில சர்க்கரை ஆலைகள் ரூ.20 செலவில் ஒரு லிட்டர் எத்தனாலை தயாரிக்க முடியும் என தெரிவித்துள்ளன. பெட்ரோலிய பொருள்களை சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் ஒரு லிட்டர் எத்தனாலுக்கு ரூ.27 விலை கொடுக்க தயாராக உள்ளதால், ஒரு லிட்டர் விற்பனையில் ஆலைகளுக்கு ரூ.7 லாபம் கிடைக்கும். எனவே வட மாநிலங்களில் உள்ள பல ஆலைகள் எத்தனால் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக தெரிகிறது.

## இந்தியாவில் பால் பவுடர் உற்பத்தி 3 லட்சம் டன்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நம் நாட்டில் ஆண்டுக்கு 3 லட்சம் டன் பால் பவுடர் உற்பத்தி ஆகி வருகிறது. இதில் 40,000 டன் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உலக அளவில், பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. எனினும் பயன்பாடு அதிகரித்து வருவதால் உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது. இல்லையென்றால், அடுத்த பத்து ஆண்டுகளில், தேவையைப் பூர்த்தி செய்ய, வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் பால் மற்றும் பால் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகும் என அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய அரசு பால் பவுடர் ஏற்றுமதி மீது தடை விதிக்க முடிவு

*செய்துள்ளது. உள்நாட்டில் விலை உயர்வை தடுக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனால் பால் பொருள்கள் ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு ரூ.500 கோடி இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

# தேங்காய் ஏல விற்பனை தொடக்கம்




பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் தேங்காய் ஏல விற்பனையை பொள்ளாச்சி சரக துணைப்பதிவாளர் ஆ.பழனிசாமி தொடங்கி வைத்த போது எடுத்தபடம். அருகில் சங்கத் தனி அலுவலர் ராதாகிருஷ்ணன், நீர்ப்பாசன தலைவர் நல்லதம்பி, கோவை மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் எஸ்.சக்கர வர்த்தி, சங்க செயலாளர் டி.ஈஸ்வரன், மற்றும் கதிர்வேலு, முருகராஜ், குமார், முத்து ஆகியோர் உள்ளனர்.